


# புத்தாண்டே வருக

புத்தாண்டே வருக! புதுப்பொலிவைத் தருக
எங்கள் உள்ளமும் இல்லமும் மகிழ
வேண்டியதெல்லாம் நிறைய!

வள்ளல் குணத்தில் எங்களைப் போன்று
யாரும் இல்லை என்று
வையகம் போற்றி வாழ்த்தும்படியாய்
வாழ்ந்திடத் துணை வருவாய்!
புத்தாண்டில் ஓர் சபதம் ஏற்போம்
புதுவழியை நாம் தேர்ந்தெடுப்போம்!

போகியில் போட்டெரிக்கும்
பொருட்களில் ஒன்றாக
ஜாதியும் மதமும் போய்ச் சேரட்டும் - எங்கள்
ஆவியே போனாலும் பிரிவினையைத் தேடோம் என
ஆர்ப்பரித்து நம்வலிவைக் கூறட்டும்!

ஆட்கொல்லும் தீவிரவாதம் மறையட்டும் - அண்ணல்
அஹிம்சை நெறியே எங்கும் நிறையட்டும்
வேலைகேட்க மக்களுண்டு
வேலைமட்டும் இல்லை என்ற
வேதனைகள் மறையட்டும் - இனி